**Commercial Space for Rent**
850 Square feet for 27,000/- @ ground floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
2 L as advance
CONTACT 7305837388

# EXPRESS VELACHERY

Neighbourhood Newspaper – Weekly

*Free Circulation*

**Commercial Space for Rent**
650 Square feet for 23,000/- @ first floor
*Diya Complex, Vijayanagar Main Road, Velachery (Near Ananda Bhavan)*
6 month rent as advance
CONTACT 7305837388

VOL - 3 ISSUE - 30 Editorial : 044-42077328 / 7305837388 email : expressvelachery@gmail.com









# சென்னை: வேளச்சேரி-பரங்கிமலை பறக்கும் ரயில் பாதை...

ஒரு வருடம் அல்ல, இரண்டு வருடம் அல்ல 12 ஆண்டுகளுக்கு மேலாக இழுபறியில் இருக்கிறது வேளச்சேரி-பரங்கிமலை பறக்கும் ரயில் பாதை. வெறும் 500 மீட்டர் தொலைவு பாதையை முடிக்க முடியாத காரணத்தால் பல கிலோமீட்டர் சுற்றிச்சென்ற சென்னைவாசிகளே அடுத்த 10 மாதத்தில் பணிகள் முடிக்கப்பட உள்ளது. அனேகமாக அடுத்த ஆண்டு வேளச்சேரி-பரங்கிமலை ரயில் ஓடிவிடும் என தெரிகிறது.



சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், போக்குவரத்து சேவையை அதிகரிக்கும் நோக்கில் பறக்கும் ரயில் திட்டம் அமைக்க 1985-ஆம் ஆண்டு எம்ஜிஆர் முதல்வராக இருந்த காலத்தில் திட்டமிடப்பட்டது. சென்னை கடற்கரை முதல் பரங்கிமலை வரை மூன்று கட்டங்களாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது.

மூன்றாம் கட்டமாக வேளச்சேரி - பரங்கிமலையை இணைக்கும், பறக்கும் ரயில் திட்டப்பணியை ரூ.495 கோடியில் கடந்த 2008-ம் ஆண்டு ரயில்வே தொடங்கியது. மொத்தமுள்ள 5 கி.மீட்டரில் 4.5 கி.மீ. தொலைவுக்கு 167 தூண்களுடன் ரயில் பாதைகள் வேகமாக அமைக்கப்பட்டன ஆதம்பாக்கம் தில்லை கங்கா நகர் வரை கட்டுமான பணிகள் முடிந்துள்ளன. தில்லை கங்கா நகர்- பரங்கிமலை இடையே, 500 மீட்டர் தொலைவு ரயில் பாதைக்கு நிலம் கையகப்படுத்துவதில் பிரச்சனை ஏற்பட்டது. ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகர் பகுதியில் சிலர் எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது. தற்போது, இந்தப் பிரச்சனைக்கு அண்மையில் இதற்கு தீர்வு காணப்பட்டது. கொரோனா பாதிப்பால் பணிகளை உடனடியாக தொடங்கவில்லை.

தற்போது மீண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அடுத்த ஆண்டு ஜூலை மாதத்துக்குள் பணிகளை முடிக்க இலக்கு நிர்ணயித்து உள்ளார்கள். வேளச்சேரி -பரங்கிமலை பறக்கும் ரயில் திட்டத்தில், முதல் கட்டமாக, வேளச்சேரி -ஆதம்பாக்கம் வரை ரயில் போக்குவரத்தை நீட்டிக்க அதிகாரிகள் தரப்பில் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, இந்தப் பாதையில் உள்ள புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் நிலையங்களின் மீதம் உள்ள பணிகளை விரைவாக முடித்து, வேளச்சேரி- ஆதம்பாக்கம் வரை ரயில் போக்குவரத்தை நீட்டிக்க அதிகாரிகள் ஆலோசித்தார்கள்.

ஆனால் கொரோனா ஊரடங்கு காரணமாக புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் நிலையங்களின் கட்டுமான பணி முடிந்து, நடை மேடைகளில், கற்கள் பதிக்கும் பணி, மின் தூக்கி, நகரும் மின் ஏணி நிறுவும் பணிகளில் தாமதம் ஆனது. தற்போது பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேலும் 500 மீட்டர் தூரத்திற்கு பிரச்சனையாக இருந்த இடத்திலும் வேலைகள் தொடங்கி உள்ளன. அனைத்து பணிகளும் அடுத்த ஜூலையில் நிறைவு பெறும் என அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எனவே வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை பணிகள் முழுமையாக முடிந்த பிறகு ரயில் சேவை அடுத்த ஆண்டு இதே மாதத்திற்குள் தொடங்கும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# யோகாசனம்

## சசாங்காசனம்



**விளக்கம்:**

'சசாங்க' என்றால் சந்திரன் என்று பொருள். இந்த ஆசனம் வளர்பிறை சந்திரன் போல இருப்பதால் சசாங்காசனம் என்று அழைக்கப்படுகிறது.

**சசாங்காசனத்தின் பயன்கள்:**

- ❖ இடுப்பின் எலும்புகள், தசைகள், நரம்புகள் வலுப்பெறும்.
- ❖ கோபம் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- ❖ மலச்சிக்கல் நீங்கும்.
- ❖ வயிற்றிலுள்ள உறுப்புக்களும், சுரப்பிகளும் சீராக இயங்க ஊக்குவிக்கிறது.
- ❖ அட்ரீனல் சுரப்பி நன்கு செயல்படும்.
- ❖ சுவாச கோளாறுகளுக்கு பயனுள்ளது.

# வேளச்சேரி குளத்தில் வெள்ள மீட்பு ஒத்திகை...

வேளச்சேரி : வெள்ள பாதிப்பின் போது, பொதுமக்கள் எப்படி தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும் என, வேளச்சேரி குளத்தில் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

வடகிழக்கு பருவ மழை வெள்ள பாதிப்பை எதிர்கொள்வது தொடர்பாக, தீயணைப்பு துறை சார்பில், வேளச்சேரி, தண்டீஸ்வரர் கோவில் குளத்தில், 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஒத்திகை நிகழ்ச்சி நடந்தது. வேளச்சேரி, தேனாம்பேட்டை, மயிலாப்பூர் ஆகிய தீயணைப்பு நிலைய வீரர்கள், வெள்ள மீட்பு ஒத்திகை நடத்தினர்.

வெள்ள பாதிப்பின் போது, பொதுமக்கள் எப்படி தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும் என, செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து, ரப்பர் படகு, லைப் ஜாக்கெட் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் வாயிலாக, வெள்ளத்தில் சிக்கியவர்கள் மீட்பது குறித்து, செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இதில் 30க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்று, வெள்ள மீட்பு ஒத்திகையை பொது மக்களுக்கு செய்து காண்பித்தனர்.



# சிறுநீரக கற்கள் கரைய பாட்டி வைத்தியம்

❖ வாழை தண்டை அறிந்து நீரில் அரை மணி நேரம் ஊற வைத்து பின் அரைத்து வடிகட்டி அச்சாறுடன் சிறிது உப்பு மற்றும் எலுமிச்சை சாறு கலந்து தினமும் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கற்கள் வெளியேறி விடும் .

❖ எலுமிச்சை சாறு ஆலிவ் எண்ணெய் ஒன்றாக கலந்து குடித்து விட்டு பிறகு 1 டம்ளர் நீரை குடிக்கவும். இவ்வாறு ஒரு நாளைக்கு 2 முதல் 3 முறை செய்து வந்தால் சிறுநீரக கற்கள் வெளியேறி விடும் .

❖ சிறுநீரக கற்களால் அவதிப்படுவோருக்கு மாதுளை சாறு சிறந்த மருந்து. இதனை தினமும் குடித்து வந்தால் சிறுநீரக கற்கள் நீங்கி விடும்.

❖ முள்ளங்கி சாறு 30 மிலி அளவு குடித்து வந்தால் சிறுநீரக கோளாறு நீங்கும்.

## சென்னையில் தங்கம் மற்றும் வெள்ளி விலை நிலவரம்

| | 22 கேரட் | 24 கேரட் |
|---|---|---|
| தங்கம் விலை - | 1 கிராம் ₹ 4,370 | 1 கிராம் ₹ 4,768 |
| | 8 கிராம் ₹ 34,960 | 8 கிராம் ₹ 38,144 |
| வெள்ளி விலை - | 1 கிராம் ₹ 65.90 | |
| | 1 கிலோ ₹ 65,900 | |

## சென்னையில் பெட்ரோல், டீசல் விலை நிலவரம்





| பெட்ரோல் விலை | டீசல் விலை |
|---|---|
| விலை 1 லிட்டர் | விலை 1 லிட்டர் |
| ₹ 99.06 | ₹ 93.35 |

*To Advertise about Rental House, Land Sales & Job Vacancy Pay Rs. 200/- Only*

Order Now!!!
Om Shri Raghavendraya Namaha



MIRTHIKA FOODS
(A NEW HOMEMADE FOOD VENTURE AT YOUR DOORSTEP)

DINNER MENU

| | |
|---|---|
| Idly (1) | ₹ 10 |
| Chapathi with side dish (4) | ₹ 50 |
| Kitchadi (upma or aval) | ₹ 40 |
| Kuzhi Paniyaram (5) | ₹ 30 |
| Kal Dosa (2) | ₹ 30 |

CONTACT NO.: 8870581650
*Home Delivery Available
Please confirm your orders before 4pm!!






# இந்த வார ராசிபலன்

### மேஷம்

இந்த வாரம் எதிர்மறை எண்ணங்கள் உங்கள் மனதில் ஆதிக்கம் செலுத்தும். எனவே உங்கள் இயல்பை மேம்படுத்த நீங்கள் யோகா மற்றும் தியானத்தின் உதவியை பெறலாம்.

### ரிஷபம்

இந்த வாரம் உங்கள் முழு ஆற்றலும், அதீத உற்சாகமும் உங்களுக்கு பல நேர்மறையான முடிவுகளைத் தரும். உங்களை மன அழுத்தத்திலிருந்து விலக்கி வைக்க உதவியாக இருக்கும்.

### மிதுனம்

இந்த வாரம் ஆரம்பத்தில் இருந்தே, வேலை தொடர்பான பொறுப்புகள் உங்கள் மீது அதிகரிக்கலாம். இதன் காரணமாக உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும்.

### கடகம்

இந்த வாரம், உங்கள் குழந்தைகளின் விளையாட்டு அவர்கள் கல்வியில் சிக்கலை ஏற்படுத்தும். இதன் காரணமாக நீங்கள் அவர்கள் மீது கோபப்படுவதைக் காணலாம்.

### சிம்மம்

இந்த வாரம் உங்கள் ஆரோக்கியத்தில் முன்னேற்றத்தைக் கொண்டுவரும். இந்த சூழ்நிலையில் ஒரு துறவியின் ஆசீர்வாதம் உங்களுக்கு மன அமைதியை அளிக்கும்.

### கன்னி

இந்த வாரம், பல சுப கிரகங்களின் செல்வாக்கின் காரணமாக, உங்கள் விருப்ப சக்தி வலுவாக இருக்கும், இதன் உதவியுடன் உங்கள் தொழிலில் புதிய சாதனைகளை அடைய முடியும்.

### துலாம்

இந்த வாரம் உங்களுக்கு பணிச் சுமை சற்று அதிகமாக இருக்கும். இதனால் நீங்கள் சோர்வாக உணர்வீர்கள். வேலை செய்யும்போது கவனமாகவும் சரியாகவும் செய்யுங்கள்.

### விருச்சிகம்

இந்த வாரம் உங்களுக்கு அதிக ஆற்றல் இருக்கும், ஆனால் பணிச் சுமை உங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தும். இதனால் நீங்கள் மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.

### தனுசு

இந்த வாரம் நீங்கள் அனைத்து வகையான பயணங்களையும் தவிர்க்க வேண்டும், இல்லையெனில் நீங்கள் சோர்வாகவும் மன அழுத்தமாகவும் உணருவீர்கள்.

### மகரம்

இந்த வாரம் பணியிடத்தில் உங்கள் நிலை தெளிவாகத் தெரியும். இதன் காரணமாக உங்கள் எதிரிகளும் நண்பர்களாக மாறுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

### கும்பம்

இந்த வாரம் ஆரம்பத்தில் நீங்கள் கொஞ்சம் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். ஆனால் நடுத்தர பகுதிக்குப் பிறகு ஒவ்வொரு வேலையிலும் வெற்றிக் காண்பீர்கள்.

### மீனம்

இந்த வாரம் உங்களுக்கு போதுமான நேரம் கிடைக்கும் என்பதால், வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நல்ல ஆரோக்கியத்திற்காக நடைப் பயணத்திற்கு செல்லுங்கள்.






















# Chutties Corner

## BIRTHDAY WISHES



Saranya
September - 07

## தனித்திறமை பகுதி




kundavi
IV - Std

## வண்ணம் தீட்டுக



☆ ☆ ☆ ☆ ☆


5 Star ratings from your parents

## PAPER CRAFT




## WAY GAME

Help the rabbit



உங்கள் வீட்டு குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை அவர்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

## வண்ணக்கோலம்





Dhivya
Velachery






# YOUNG ACHIEVER AWARD



This week Adyant Sai received young Achiever award from our Express Velachery team.

***"The intuitive mind is a sacred gift"- Albert Einstein***

Our cute little bundle of joy Adyant Sai is Pursuing PreKG in CS Academy - Coimbatore (City Campus). Venkatesh & Swarna are the proud parents of Adyant.

He is a sparky and smart child who just turned 4 few months ago. As a kid, he was always very acute and had keen powers of observation. He has a versatile way of approaching things unlike other children of his age. This intum developed a sense of intellectual curiosity within him, which also kept us motivated in making him actively participate in numerous online contests.





Adyant has taken part in competitions like Drawing, Art & Craft, Rangoli, Fashion show, Dress up (Fancy dress), Young mind, Puzzle solving etc. and had bagged around 122 medals and 62 trophies.

**We feel immensely privileged to also mention that he has made 3 Mass world records from Jackhi book of world records for Drawing, Yoga & Recitation contests and from Kalams Book of Records for Craft.**

He was awarded A1 Grade in the District Level Swatch Bharath Drawing Contest held by National Economic Growth Society of India.

His constant efforts are progressing by each passing day and has truly made us believe that kids develop faster and further than other attributes such as social, emotional and physical development due to their high cognitive abilities and high intensities, thereby experiencing and relating to the world in unique ways.

We wish he pursues forward with flying colours and never stops surpising us with his potentials.

## Six Vaccination Camps organized till date in the Guru Nanak College campus during pandemic...

Guru Nanak College (Autonomous) Chennai ramps up vaccination of staff, students, Home guards and general public.

With the covid-19 protocol in place, Guru Nanak College was ramping up the vaccination of staff and students on campus. Guru Nanak Educational Society has fast-tracked the inoculation through special drives on the campus, throughout the pandemic enabling most of the staff and students vaccinated either partially or fully.

The vaccination camp was organised on the College campus in association with the Greater Chennai Corporation. In an additional move to support the Government's Vaccination norms, a series of Mega Vaccination Camp for students, staff , home guards and the general public are being organised. Students, Staff and general public from the locality actively participated to join hands against the deadly pandemic. Both the Covishield and Covaxin vaccines were administered. Dr. M.G. Ragunathan, Principal, Guru Nanak College, instructed that all students and faculty to take the doses of the Covid-19 vaccine, as per Government norms and make the environment a totally protected fully vaccinated campus.





# சிவா விஷ்ணு ஆலயத்தில் நடைபெற்ற பவித்ர உற்சவம் சிறப்பு பூஜைகள்...



நமது வேளச்சேரி சிவ விஷ்ணு ஆலையத்தில் 12ஆம் தேதி அன்று பவித்ர உற்சவம் நடைபெற்றது. 13ஆம் தேதி பவித்ரோத்ஸவம், ம்ருத்சங்கர ஹரணம் (பூமி பூஜை), மற்றும் அங்குரார்பணம் செய்யப்பட்டது.

ரக்ஷாபந்தனம் பின் பெருமாள் யாக சாலை எழுந்தருளி கும்ப மண்டல ஸ்தாபனம், அங்குர ஹோமம், பவித்ர பிரதிஷ்டை நடைபெற்றது. 14ஆம் தேதி காலை 8.00 மணிக்கு யாக சாலை கும்ப, மண்டல ஆராதனம்,





பெருமாளுக்கு 65 ஆராதனம், ஹோமம் பிறகு பவித்ரம் சாற்றுதல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பவித்ரோத்ஸவம் இரண்டாவது நாள் 3ஆம் கால ஹோமமும், 195 ஆரதானமும் நிறைந்தது. 3 நாட்களில் 6 கால ஹோமமும், 365 ஆராதனைகளும், கும்ப, மண்டல, அக்னி பிம்ப (உற்சவ திருமேனி) வடிவில் பூஜைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

16ஆம் தேதி புதன்கிழமை அன்று பவித்ர உற்சவம் மிகச் சிறப்பாக முடிவடைந்தது. இதில் பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.


Brahmin Kalyanam.com
An auspicious beginning...

பிராமணர்களுக்கு மட்டும்
REGISTER & GET
Brides/Grooms Profiles +
Free Benefits for 1000 days validity.
One time membership Fee Rs.1000 only.

Astro Guidance By :
Thethiyur V J Raman
Aathmartha Jothidar
89397 02500
brahminkalyanam.com@gmail.com


# வேளச்சேரி முதல் மேடவாக்கம் வரை, உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு...

சென்னை - பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நிலத்தை மீட்க, வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். வேளச்சேரி முதல் மேடவாக்கம் வரை, பள்ளிக்கரணை சதுப்பு நிலம் பரவி உள்ளது. இங்கு, 176 வகை பறவையினங்கள், 10 வகை பாலுாட்டிகள், 21 வகை ஊர்வன, 50 வகை மீன் இனங்கள் உள்ளன. கடந்த 2020 - 21 ஆண்டில், இங்கு 41 ஆயிரத்து 849 பறவைகள் வந்து சென்றன. தற்போது, சுற்றுச்சூழல் மேம்பாட்டு பணிகள் நடக்கின்றன. அவற்றை வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் நேற்று ஆய்வு செய்தார்.

இது குறித்து, வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: சதுப்பு நில மையப்பகுதியில் கொட்டப்பட்ட, கட்டட கழிவுகளை பயன்படுத்தி கரை அமைக்கப்பட்டுள்ளது. அங்கு, பொதுமக்கள் வந்து செல்லும் வகையில், சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாம்பரம் - வேளச்சேரி சாலையில் 1,700 மீட்டருக்கு நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. இதை பொதுமக்கள் பயன்படுத்த வசதி செய்யப்பட்டு வருகிறது.

இந்த பணிகளை, வனத்துறை அமைச்சர் ராமசந்திரன் நேற்று ஆய்வு செய்தார். அப்போது சதுப்பு நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து விசாரித்தார்.

இங்கு, வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட பகுதிகளில் 29 ஏக்கர் பரப்பளவுக்கு மக்கள் வீடு கட்டி ஆக்கிரமித்து வசித்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இங்கு, 47 நபர்களுக்கு குடிசை மாற்று வாரியம் வாயிலாக வீடு ஒதுக்க 32 லட்ச ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், 102 நபர்களுக்கு வீடுகள் ஒதுக்குவதற்காக, குடிசை மாற்று வாரியம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என இவ்வாறு அவர்கள் கூறினர்.

## அறிவியல் தகவல்

### பிளாஸ்டிக்கின் விதியை மாற்றும் வேதியியல்

◆ ஜெர்மனியிலுள்ள விஞ்ஞானிகள், உலகமே வெறுக்கும் "பிளாஸ்டிக்"கிற்கு, வேறு வகையில் மறுவாழ்வு தர ஆராய்ந்து வருகின்றனர். அந்த ஆராய்ச்சியின் விளைவாக, தற்போது அவை மனித தேவைகளுக்கு ஏற்றபடி மாறும் தன்மையை பெற்றுள்ளனர்.

◆ பிரான்ஹோபெர் பாலிமர் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், பிளாஸ்டிக்குடன், என்சைம்களைக் கலக்கும் முயற்சியில் வெற்றி பெற்றுள்ளனர். அதிக வெப்பத்தில் உருகிய நிலையில் இருக்கும் பிளாஸ்டிக்குடன் என்சைம்களை கலந்தால் அவை உயிரிழந்துவிடும். எனவே, நுண்துளைகளைக் கொண்ட சில துகள்களில் என்சைம்களை நுழைத்து, பிளாஸ்டிக்குடன் விஞ்ஞானிகள் கலந்தனர்.

◆ ஆனால், வெப்பத்தினால் பாதிக்கப்படாமல், அந்த துகள்களின் துளைகளில் இருந்த என்சைம்கள் தப்பித்தன. அந்த என்சைம்கள் பிற்பாடு இரு வகைகளில் பிளாஸ்டிக்குகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஒன்று பிளாஸ்டிக்கின் மேற்புற புறதங்களை சிதைக்கும்படி செய்யலாம். அல்லது. பிளாஸ்டிக்குகளை விரைவில் மட்கும்படி செய்யலாம். சோதனைக் கூடத்தை விட்டு பிளாஸ்டிக்-என்சைம் தொழில்நுட்பம் வந்தால், அதற்கு பெரும் வரவேற்பு காத்திருக்கிறது.

# விவசாயம் காப்போம்

## ஒரு ஏக்கரில் திசு வாழை சாகுபடி

ஒரு ஏக்கரில் திசு வாழை சாகுபடி வீரியமிக்க ஜி.9 ரகத்தைச் சேர்ந்த வாழை மரத்தில் இருந்து திசு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வாழை கன்றுகளை விவசாயிகளுக்கு நல்ல பலன் தருகிறது. நோய் தாக்குதல் இருக்காது.

வீரியமிக்க வாழை என்பதால் பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. வாழை மரத்தின் தூர் பகுதி கனமாக இருப்பதால் மழை, காற்று போன்ற இயற்கை இடர்பாடு பாதிப்புகளில் அதிக பாதிப்பு வராமல் பாதுகாக்கலாம்.

தோட்டக்கலை வழங்கும் அட்டவணைப்படி இயற்கை உரத்தை திசு வாழைக்கு பயன்படுத்தினால் பிற வாழை விவசாயத்தை விட 3 மடங்கு லாபம் சம்பாதிக்கலாம் .

ஒரே நேரத்தில் வாழை தார்களை அறுவடை செய்ய முடியும். பூவன், ஒட்டு போன்ற பிற ரகங்களை சேர்ந்த வாழைகளில் வாழைத் தாரில் உள்ள காய்களின் எண்ணிக்கையை பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால் திசு வாழையில் எடை கணக்கில் விற்பனை செய்யப்படுகிறது.

ஏக்கருக்கு 33 டன் மகசூல் கிடைக்கிறது. ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவாகிறது. லாபம் ஐந்து லட்சம் ரூபாய் கிடைக்கும்.

# Entertainment Corner

## குறுக்கெழுத்துப் புதிர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | | ■ | | ■ | ■ | |
| | ■ | | | ■ | | | ■ | 3 | |
| | | | | 4 | | | ■ | | |
| | | | | | 5 | | | | |
| | | | | | 7 | | | | 6 |
| ■ | 8 | | | | | 9 | | | ■ |
| 10 | ■ | | | ■ | 11 | | | | 12 |
| | ■ | 13 | | ■ | | ■ | | | |
| 14 | | | | | | 15 | | | |
| | | | | 16 | ■ | ■ | 17 | 18 | |

**இடமிருந்து வலம்:**

1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று (2)
2. நேர் நேர் - வாய்பாடு (2)
11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)
14. மக்களே போல்வர் ________ (4)

**மேலிருந்து கீழ்:**

1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)
2. மொழிஞாயிறு (9)
3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல் _________ (5)
4. கழை என்பதன் பொருள் (4)
7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் (4)
10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு ______ (4)
12. ______ என்பது புறத்திணைகளுள் ஒன்று (4)

**வலமிருந்து இடம்:**

15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் - ஆசிரியர் (4)
16. மதிமுகம் உவமை எனில் முகமதி _______ (5)

**கீழிருந்து மேல்:**

5. விடையின் வகைகள் (3)
6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)
8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4)
9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று (6)
13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது (7)
17. 96 வகைச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7)
18. செய்தவம் - இலக்கணக்குறிப்பு (5)

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த, உங்கள் ஓவியம், கைத்திறம், கோலம் மற்றும் கவிதைகளை உங்களின் புகைப்படத்தோடு சேர்த்து வாட்சப் அல்லது மெய்ல் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். இதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.


| | |
|---|---|
| Publisher | : R. Rajesh |
| Editor | : Saranya Rajesh |
| Designer | : S. Aswini |
| Journalist | : P. Praveen |
| Marketing Executive | : C. Karthikeyan |

இது எங்களுடைய ஒரே பத்திரிக்கை நிறுவனம்
This is our only concern

**Express Velachery**
*Weekly - News Paper*
37F, Diya Complex
Velachery Main Road, Vijayanagar,
Velachery, Chennai - 600042.
*Timing: Monday to Friday 9.30 am to 6.00 pm*
*Saturday 9.30 am to 12.30 pm*
044-42077328 / 7305837388
E-mail : expressvelachery@gmail.com



**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisements in these columns. Express Velachery does not vouch for any claims made by the Advertisers. The Printers, Publishers, Editor and Owners of Express Velachery shall not be held responsible/ liable for any consequences, in case such claims are found to be false.


## தமிழோடு! விளையாடு!

### வார்த்தை தேடு

கட்டத்தில் உள்ள எழுத்துக்களில்
10 மலைகளின் பெயர்களை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | ஐ | கு | சி | அ | தா | ந் | கி | ங் | அ |
| ம் | எ | ரு | ரி | ஔ | ஆ | பா | ம் | கா | சௌ |
| பா | ஐ | சி | ங் | ஃ | னை | உ | அ | ஓ | ஃ |
| து | ஆ | கா | வீ | ஒ | மு | ஒ | ஐ | ஆ | ஊ |
| ரா | ஓ | ர் | உ | ச் | டி | நீ | எ | உ | எ |
| உ | ஆ | ஓ | க | இ | ஏ | வ | ஆ | ஒ | ல் |
| ஆ | ஊ | ங் | அ | ஔ | எ | ம | அ | ஏ | யோ |
| ஊ | சா | ஏ | ஓ | உ | அ | லை | ஏ | ஏ | தி |
| பூ | ர் | பு | து | ரா | ஒ | உ | ஐ | ஓ | ர் |
| ஆ | ர் | க | ங் | லா | ஸ் | ஏ | எ | ஓ | ஹ |

சென்ற வார வார்த்தை தேடு
விளையாட்டிற்க்கான விடைகள்
10 உலக மொழிகளின் பெயர்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ஓ | இ | ஊ | ஔ | உ | எ | ஜ | ஔ | ரோ |
| கி | கொ | க் | ஓ | ஒ | ரி | யா | ப் | ப | மா |
| ரே | ரி | போ | ஔ | இ | ந் | தி | பா | ஞ் | னி |
| க் | ய | அ | ங் | கே | ரி | ய | னி | சா | ய |
| க | ன் | த | இ | ரி | அ | ஔ | ய | பி | ம் |
| ம் | இ | ஏ | மி | எ | க் | லி | ம் | ஊ | கு |
| பா | அ | இ | ஓ | ழ் | ஒ | தோ | தி | ஐ | ங் |
| ப் | எ | ர | ஃ | தி | த் | ரா | ம | மை | லு |
| ரு | எ | ஏ | பு | ய | னி | மா | ரு | உ | தெ |
| யோ | ஒ | இ | ஊ | எ | கி | ய் | ரா | ச | ஔ |

**சென்ற வார குறுக்கெழுத்து விளையாட்டிற்கான விடைகள்**

**மேலிருந்து கீழ்:** 1. வைகை 2. கப்பல் 3. வீரமணி 5. சிலை 8. டயர் 9. அவ்வை 10. மடமை 11. பாடல் 14. கோவை

**இடமிருந்து வலம்:** 1. வைக்கம் வீரர் 4. காசி 6. பம்மல் 7. கடல் 11. பார்தீவ் 12. கசட 13. வைகோ

**அறுசுவை சமையல்**

## ரவா பாயாசம்

**தேவையான பொருட்கள்:**

ரவை - 1/2 கப்
பால் - 1 லிட்டர்
சர்க்கரை - 200 கிராம்
கண்டென்ஸ்ட் மில்க் - 3 ஸ்பூன்
ஏலக்காய் - 5
முந்திரி - 2 ஸ்பூன்
உலர் திராட்சை - 2 ஸ்பூன்
நெய் - 3 ஸ்பூன்

**செய்முறை:**

❖ முதலில் வாணலியை அடுப்பில் வைத்து, நெய் ஊற்றி சூடானதும், முந்திரி மற்றும் உலர் திராட்சை சேர்த்து பொன்னிறமாக வதக்கி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

❖ பின்னர் மீதமுள்ள நெய்யை வாணலியில் ஊற்றி, ரவை சேர்த்து 3 நிமிடம் நல்ல மணம் வரும் வரை வறுக்க வேண்டும்.

❖ பின்பு அதில் பாலை ஊற்றி கட்டிகள் சேராதவாறு நன்கு கிளறி 10-15 நிமிடம் வேக வைக்க வேண்டும்.

❖ ரவை நன்கு வெந்ததும், அதில் ஏலக்காயை தட்டிப் போட்டு கிளறி விட வேண்டும். பிறகு அதில் சர்க்கரை மற்றும் கண்டென்ஸ்டு மில்க் சேர்த்து கிளறி, 5 நிமிடம் நன்கு கொதிக்க வைக்க வேண்டும்.

❖ பின்பு வறுத்த முந்திரி மற்றும் உலர் திராட்சையை சேர்த்து கிளறி இறக்கினால், சுவையான ரவா பாயாசம் தயார்.

## எக்ஸ்பிரஸ் ஜோக்ஸ்.........



மகன் : எலெக்ட்ரிக் ஒயர்ல மூணு எறும்பு போச்சாம், அதில இரண்டு எறும்பு ஷாக் அடிச்சு செத்துப்போச்சாம்... ஒண்ணு மட்டும் சாகலை, ஏன்...?
அப்பா : தெரியலையே...
மகன் : ஏன்னா... அது கட்டை எறும்பு பா...

******

பாட்டி : எத்தனை நாளாடா இந்த பழக்கம்?
பேரன் : எந்த பழக்கம்?
பாட்டி : லாட்டரி சீட் வாங்குறது...
பேரன் : அது தமிழ்நாட்டிலேயே இல்லையே...
பாட்டி : பொய் சொல்லாத டா... இப்போ தான் உன் சட்டை பையிலே இருந்த ரோஸ் கலர் லாட்டரி சீட்டை கிழிச்சு போட்டேன்...
பேரன் : ஐயோ... கௌவி அது ரெண்டாயிரம் ரூவா நோட்டு...

******

## விடுகதை விளையாட்டு

1. காலில்லாதவன் வளைவான் நெளிவான் காடு மேடெல்லாம் அலைவான் - அவன் யார்?
2. காற்றைக் குடித்து காற்றில் பறப்பான் - அவன் யார்?
3. அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் - அது என்ன?
4. கன்று நிற்க கயிறு மேயுது - அது என்ன?
5. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான் - அவன் யார்?

**சென்ற வார விடுகதை விளையாட்டிற்கான விடைகள்**

**1. தலைமுடி 2. விளக்கு 3. புல்லாங்குழல் 4. ரத்தம் 5. கத்தரிக்கோல்**

## சுடோக்கு விளையாட்டு

கட்டத்தில் உள்ள எண்களுக்கு ஏற்ப சரியான விடையை கண்டுபிடியுங்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 5 | | 9 | | | | 6 |
| | 2 | 3 | | 8 | | | 4 | |
| 8 | | | | | 3 | | | 1 |
| 5 | | | 7 | | 2 | | | |
| | 4 | | 8 | | 6 | | 2 | |
| | | | 9 | | 1 | | | 3 |
| 9 | | | 4 | | | | | 7 |
| | 6 | | | 7 | | 5 | 8 | |
| 7 | | | | 1 | | 3 | 9 | |

*சென்ற வார சுடோக்கு விளையாட்டிற்கான விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 6 | 7 | 9 | 2 | 3 | 8 | 5 |
| 2 | 5 | 8 | 3 | 4 | 6 | 7 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 | 2 |
| 4 | 3 | 7 | 9 | 1 | 5 | 8 | 2 | 6 |
| 5 | 8 | 1 | 6 | 2 | 7 | 9 | 3 | 4 |
| 6 | 9 | 2 | 4 | 3 | 8 | 1 | 5 | 7 |
| 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 8 | 2 | 4 | 1 | 5 | 3 | 6 | 7 | 9 |
| 9 | 6 | 5 | 8 | 7 | 4 | 2 | 1 | 3 |

TNBIL04133 R.Dis.No.1845/2014



# NATIONAL LEVEL ONLINE CLAY MOULDING COMPETITION

# TALENT CABIN'S

## CATEGORY - I

**I PRIZE**



C. LALITHKUMAR
Lkg
Marg Vidhyalaya
Chennai

**II PRIZE**



S. HARIHARAN
Ukg
Bala Gurukulam N&P
Madurai

**III PRIZE**



V. NAINIKA
Ukg
Bala Gurukulam N&P
Madurai

**III PRIZE**



A. PRISCILLA STEPHY
Lkg
Bala Gurukulam N&P
Madurai

**CONSOLATION PRIZE**



VEDHIKAA PRASANNA
Lkg
Bala Gurukulam N&P
Madurai

## CATEGORY - II

**I PRIZE**



D. THEEKSHNA
III - Std
Vana Vani Matric H.S
Chennai

**II PRIZE**



R. JYOSTNA
III - Std
Sri Chaitanya Techno
Chennai

**III PRIZE**



S. BALA PRATIKSHA
II - Std
Bala Gurukulam N&P
Madurai

**III PRIZE**



M. YOGESH PANDI
II - Std
Bala Gurukulam N&P
Madurai

**CONSOLATION PRIZE**



S. PRAGNYA HARI
II - Std
Infant Jesus Matric H.S
Chennai

**CONSOLATION PRIZE**



B. DEEPA DARSHNY
I - Std
Shree Niketan Patasala
Thiruvallur

## CATEGORY - III

**I PRIZE**



V. ANU SWATHI
IV - Std
Bala Gurukulam N&P
Madurai

**I PRIZE**



S. SREELAKSHMI
V - Std
Vels Vidhyashram
Chennai

**II PRIZE**



M. VIJAY
IV - Std
Bala Gurukulam N&P
Madurai

**II PRIZE**



KRISHNA VATNANI
IV - Std
Iira International School
Gujarat

**III PRIZE**



YEDDANAPUDI JEYAN
IV- Std
Delhi Public School
Hyderabad

## CATEGORY - III

**III PRIZE**



G. KAVIDHARSHINI
V- Std
Bala Gurukulam N&P
Madurai

**CONSOLATION PRIZE**



L. M. INDUPRAKASH
IV- Std
Bala Gurukulam N&P
Madurai

## CATEGORY - IV

**I PRIZE**



V. RAHUL VITTAL
X - Std
D.A.V School
Chennai

**II PRIZE**



G.V. NITHISH
VII - Std
Marg Vidhyalaya
Chennai



**BALA GURUKULAM NURSERY AND PRIMARY SCHOOL of MADURAI receives APPRECIATION AWARD for sending more number of entries**



Owned & Published R.Rajesh, No.17, 100ft, By Pass Road, Velachery, Ch-42. Printed by S.Ali Mohammed Sayeed, No.22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Ch-14. Editor: SARANYA RAJESH